1982 மார்ச் 4]

மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

* வினா எண் 354—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு பால்பண்ணை திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ) உள்ளது, இத்திட்டத்தின்படி பால்பண்ணை திட்டத்திலிருந்து மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் தண்ணீர் கொண்டுவர குழாய் மூலம் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பால்பண்ணை திட்டத்திற்குள் குழாய் இணைப்பு பணிகள் முன்னேறி வருகின்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள், பாராட்டுகிறேன். ஆனால், ஏற்கெனவே அந்த மருத்துவமனையிலிருக்கிற மக்கள், நானும் திரு. நெடுமாறன் அவர்களும் அங்கே சென்றிருந்தபோது முறையிட்டார்கள். அதன் பின்னர் நாங்கள் கலெக்டர், டீன் ஆகியோருடன் பேசி, அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, இவ்வளவு நாளைக்குள் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களே. அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் இது சம்பந்தமாக பேசியதன் காரணமாக என்று சொல்லி தங்களுடைய முயற்சிக்கு பெருமை சேர்த்துக்கொள்கிறார்கள். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. அதை ஒத்துக்கொள்கிறேன். எல்லா எம்.எல்.ஏ.-க்களும் அதற்கு முயற்சி செய்தார்கள். குறிப்பாக திரு. நெடுமாறன் அவர்கள் அதிக அக்கறை காட்டினார்கள், பாராட்டுகிறேன். இப்போது 3,10,000 ரூபாய் செலவு செய்து அதை முடித்திருக்கிறோம். இப்போது தண்ணீர் வர ஆரம்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியை முடித்ததன் காரணமாக நமக்கு தண்ணீர் சப்ளை கூட முன்னைவிட கூடியிருக்கிறது. முன்னால் நாள் ஒன்றுக்கு சராசரியாக 52 பர் காபிட்டா கன்சம்ஷன் இருந்தது. இப்போது அதற்குப் பதிலாக 120 பர் காபிட்டா கன்சம்ஷன் சராசரியாக ஒரு நோயாளிக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 4

(முற்பகல் 9-50)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் கூட தண்ணீர் பற்றாமல் இருக்கின்றது. ஆகவே முன்பு சமயநல்லூர் மின் சார நிலையம் இயங்கிக்கொண்டிருந்தபோது வைகையிலே இருந்து கிணறு வெட்டப்பட்டு தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் மின்சார நிலையத்தை விற்றுவிட்டதற்கு பிறகு இப்போது கிணறு மூடப்பட்டிருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அந்த கிணற்றிலே இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கான வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த யோசனை கூட அரசினுடைய கவனத்திலே இருக்கின்றது. இருந்தாலும் பால் பண்ணையிலே இருந்து கிடைக்கின்ற தண்ணீரை நாம் மேக்ஸிமம் யுட்டிலைசேஷன் செய்தோமேயானால் அதுவே பெரிய வெற்றியாக இருக்கும். ஆனால் இன்னொரு சங்கடமும் இருக்கின்றது. நிறைய தண்ணீரைப் பயன் படுத்தினால் சுவரேஜ் ப்ளாக் ஆகிவிடக்கூடும். ஆகவே அதற்குத் தகுந்த அளவிலே சுவரேஜ் வசதியும் இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே எந்த அளவுக்குத் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்தினால் நன்றாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, பால் பண்ணையிலே இருந்து தண்ணீர் பெறுவது என்பது பாலுக்கும் தண்ணீருக்கும் உள்ள நெருக்கத்தை காட்டுகின்றது. மதுரை ராஜாஜி மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே குடிநீரிலே சாக்கடைத் தண்ணீர் கலக்கின்ற கொடுமை இன்னும் விட்டபாடில்லை. ஆகவே நல்ல தண்ணீர் போதுமான அளவுக்கு விரைவிலே கிடைக்க அரசாங்கம், க்ராஷ் ப்ரோக்ராம் என்ற வகையிலே ஏதாவது தீவிரமான நடவடிக்கையினை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த விஷயத்திலே க்ராஷ் தேவையில்லை. க்ராஷ் ஆகிவிட்டால் ஆபத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுக்கு மொழிக்காக சில வார்த்தைகளை பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இதிலே பாலுக்கும் தண்ணீருக்கும் சம்பந்தமே கிடையாது. இது ஒரு புனிதமான ஸ்கீம். பால்பண்ணையிலே இருந்து வருகின்ற தண்ணீரை இவர்கள் பயன்படுத்துகிறார்கள். இந்த ஸ்கீம் வேண்டும் என்பதற்காக எல்லோரும் முயற்சி எடுத்துக்கொண்டோம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் போன்று எல்லோரும் நல்ல முயற்சி

எடுத்துக்கொண்டதன் காரணமாக, எல்லா கட்சியினரையும் பேச வைத்து நல்ல ஸ்கீமைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே தண்ணீர் பால் கிட்டயே போகாது. மருத்துவமனைக்குத்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பஸ்கள், லாரிகளுக்கான தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

* வினா எண் 335.—திரு. செ. செம்மலை மற்றும் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோருக்கு பஸ்கள், மற்றும் லாரிகள் தேசிய பர்மிட் வழங்க ஒதுக்கீடு அளித்துள்ளது போல் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நிலைப் பேருந்து உரிமங்கள் வழங்கு வதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு, செய்யப்பட்டுள்ளது. வாடகை லாரி உரிமங்கள் வழங்குவதில் எண்ணிக்கை கட்டுப்பாடு இல்லாததால் ஒதுக் கீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். அப்படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் என்று தனி ஒதுக் கீடு இல்லை என்றாலும் நேஷனல் பெர்மிட் வழங்குகின்ற நேரத்திலே பிற்படுத் தப்பட்டவர்களைப் பற்றி அரசு கவனத்தில் கொள்கின்றதா ? இந்த ஆண்டு பஸ்களுக்கான தேசிய பெர்மிட் வழங்குகின்றபோது தனியார்களுக்கு அப்படிப் பட்ட பெர்மிட்டுகள் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்கின்ற வழிமுறைகள் இதுவரை இல்லாத காரணத்தால்தான் அதுபற்றி கவனத்தில் கொண்டு செய்யப்பட வில்லை. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பெர்மிட்டுகள் நிச்சயமாகக் கிடைத்திருக்கின்றது என்பதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஐயம் வேண்டாம். ஆனால் எதிர்காலத்திலே இதை இப்படிச் செய்வதற்குரிய வகையிலே அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்று எற்கெனவே சொன்னேன்.